31st August 1961] [Sri C. Subramaniam]

Particularly as far as companies registered under the Indian Companies Act are concerned even this Legislature does not have the power to order the corporations to submit reports to the scrutiny of the committee appointed by the Legislature.

Considering all this, I would request the hon. Member to withdraw the Resolution. With reference to these Boards and the Corporations if the hon. Member thinks that some check is necessary, we have the estimates committee, we have the public accounts committee. It is always open to these committees to look into not only what has happened but also what is happening. I do not think we should create a fifth wheel to the coach.

MR. CHAIRMAN : Is the hon. Member withdrawing the Resolution?

SRI K. BALASUBRAMANIA AYYAR : Even if I press, it will not be passed. Therefore, I am withdrawing (Laughter).

The Resolution was, by leave, withdrawn.

(3) FISHERMEN IN THE STATE.

VIDWAN T. MUTHUKANNAPPAN : தலைவர் அவர்களே, "இம்மாநிலத்திலுள்ள மீனவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக ஆராயவும், அவர்களின் பொருளாதார, சமுதாய, கல்வி பிற்போக்கு நிலையையும் அவர்களைப் பாதிக்கும் பிரச்னைகளையும், தடைகளையும் ஆராயும் சர்வே ஒன்றை மேற்கொள்ளவும், மீனவர் சமுதாயத்தைப் பொருளாதாரம், கல்வி, சமூகநிலை ஆகியவற்றில் உயர்த்தும் அபிவிருத்தி வேலை சம்பந்தமான சிபாரிசுகள் கொண்ட அறிக்கை ஒன்றை தயாரிக்கவும் அதிகாரிகள், அதிகார சார்பற்றவர்கள், மீனவர் சமுதாயப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை நிறுவ இம்மன்றம் அரசினருக்குச் சிபாரிசு செய்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

SRI M. ETHIRAJALU : I second the resolution, Sir.

MR. CHAIRMAN : Resolution moved—

" This Council recommends to the Government to constitute a committee of officials, non-officials and representatives of the fishermen community to investigate and conduct a survey of the dispersal of the fishermen in the State, district-war, their backwardness socially, educationally and economically and the peculiar problems and disabilities which confront them and to make a report thereon together with recommendations for the amelioration and advancement of the fishermen community socially, economically and educationally ".

VIDWAN T. MUTHUKANNAPPAN : தலைவர் அவர்களே, மீனவர் சமுதாயம் கல்வியிலும், பொருளாதாரத்திலும், நாகரீகத்திலும் மிகமிகப் பிற்பட்டுக் கிடக்கிற ஒரு சமுதாயம் என்பது அனைவருக்கும் தெரியவேண்டும். பாரதியார் சொன்னாற்போல, இன்றைய நிலையிலே, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாமரராய், காடர்

களாய் வாழ்கிறார்கள், மீனவ மக்கள். மீன் துறை இருக்கிறது. உள்துறை அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை மேற்கொண்டு இருந்தபோதுதான், உண்மையாகவே, இந்த மீன் துறையை ஒழுங்குபடுத்திச் சீர்படுத்தி அது வளர்வதற்கு அடிக்கல் நாட்டினார்கள் என்று சொல்லலாம். அதற்குப் பின்னால் நான்கைந்து ஆண்டுகளாக அம்மையார் அவர்கள் அப்பொறுப்பை மேற்கொண்டார்கள். அதன் பிறகு தான் உண்மையான கட்டிடம் எழுந்திருக்கிறது. கட்டிடம் எழுந்துவிட்டது. ஆனால் நான் இந்தத் தீர்மானத்தில் சொல்வது எல்லாம் அந்தக் கட்டிடத்திற்கு 'சிமிண்டு' பூசி வண்ணம் தீட்டி அழகுபடுத்தி ஒழுங்குபடுத்தி கவர்ச்சிகரமான கட்டிடமாக . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : உள்ளே இருக்கிற குற்றங்குறைகள் தெரியாமல் . . .

VIDWAN T. MUTHUKANNAPPAN : குற்றங்குறைகள் இருந்தால் அவையும் இல்லாதவாறு நல்ல கட்டிடமாக அமைக்க அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற முறையில்தான் இத் தீர்மானம் அமைந்திருக்கிறது. அதைச் செய்வதில் அமைச்சர் அவர்கள் சிறந்தவர்கள், வல்லவர்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே நம்முடைய அரசாங்கம் மீனவ சமுதாயத்திற்கு எவ்வளவோ முறையில் உதவி வருகிறது. சிறந்த முறையில் உதவி வருகிறது. ஆயிரக்கணக்காக, லட்சக்கணக்காக பொருள் உதவி செய்து இந்தச் சமூகத்தை உயர்த்த முற்பட்டிருக்கிறது . ஆனால் இங்கே நான் வற்புறுத்திச் சொல்வதெல்லாம் கல்வியிலும், இந்தச் சமுதாயம் இன்னும் மிகமிகப் பிற்பட்டுக் கீழான நிலையில் இருக்கிறது என்பது. இந்தச் சமுதாயத்தில் இரண்டு வகைப் பிரிவுகள் உள்ளன. அதாவது கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த மீனவர்கள், இந்து மதத்தைச் சேர்ந்த மீனவர்கள் என்று. கிறிஸ்துவ சமயச் சங்கத்தவர்களை நான் தாழ்மையுடன் வணங்குவேன். அவர்களுடைய முயற்சி இல்லையானால் ஒரு சில மாவட்டங்களில்கூட இன்னும் இப்போது இருப்பதுபோன்று சற்று உயர்ந்த நிலையில் இந்த இனம் இருந்திருக்க முடியாது. சில சமயம் நான் நினைப்பதுண்டு எல்லாரும் கிரிஸ்தவர்களாக மாறி இருக்கக் கூடாதா என்று. நான் சரியான இந்து சமயத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் மனம் நொந்து கூறுகிறேன். நாகர்கோவில், கன்னியாகுமரி, திருநெல்வேலி, இங்கெல்லாம் உள்ள மீனவர்கள் உயர்ந்த நிலையில் இருக்கக் காரணம் அவர்கள் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவியதுதான். ஆனால் ஏனைய மாவட்டங்களில் இருக்கிற இந்து மீனவ மக்கள் மிகவும் கீழ்ப்பட்ட நிலையில் இருக்கிறார்கள்.

ஹரிஜன சகோதரர்கள் உயருவதற்கு அரசாங்கம் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறது அவசியம் தான். பஞ்சமர்கள் என்று கூறி அந்தச் சமூகத்திற்குச் சில வஞ்சகர்கள் செய்துவந்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரமாக இப்போது அவர்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். அத்தகைய சலுகைகளை மீனவ சமூகத்திற்கும் கொடுக்கவேண்டும். அப்போதுதான் இது முன்னுக்கு வரமுடியும். கல்வி அமைச்சர் அவர்கள் சில நேரத்தில் சொல்வார்கள் "தாழ்ந்த சமூதா

31st August 1961] [Vidwan T. Muthukannappan]

யத்தை உயர்த்த வேண்டுமென்று கூறும்போது, நீங்களே இன்னும் தாழ்ந்த சமுதாயமாகக் கருதச் சொல்கிறீர்களே" என்று அப்படி வார்த்தையளவில் சொல்லிக்கொண்டு போனுல் முன்னுக்கு வந்துவிட முடியாது. கல்வியிலே ஹரிஜன மக்களுக்கு இருக்கிற சலுகையை மீனவ மக்களுக்கும் கொடுக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் இந்தச் சமூகத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? பட்டம் பெற்றவர்கள் 20, 30 பேர்தான் இருப்பார்கள். (வக்கீல்கள்) வழக்கறிஞர்கள் இரண்டு மூன்று பேர்தான் இருக்கும். டாக்டர்கள், இன்சினியர்கள் இரண்டொருவர் என்று இருப்பார். இதைக் கணக்காவது எடுத்திருக்கிறார்களா? கணக்குச் சரியாக எடுப்பதற்குக்கூட அவர்களுக்குத் திக்கு கிடையாது. ஜாதிவாரியாகக் கணக்கு எடுப்பதும் இப்போது போய்விட்டது. அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்று சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. நாடு முழுவதும் மீன்பிடி தொழிலாளர்கள் 750,000 பேர் என்று சொல்கிறார்கள். இந்தியா முழுவம் 7-½ லட்சம் என்று சொல்கிறார்கள். எஸ்டிமேட் கமிட்டியிலிருந்து ஒரு ரிபோர்ட் வந்திருக்கிறது. அதில் 2.45 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் சொல்கிறேன் கிட்டத்தட்ட 8 லட்சத்திற்கு மேல் இருப்பார்கள். இன்னும் சிலர் சொல்லுகிறார்கள் "50 லட்சம் இருக்கலாம்" என்று. நான் இங்கு குறிப்பிடுவது எல்லாம் அதைக்கூட அரசாங்கம் சரியாகக் கணக்கெடுத்தது கிடையாது என்பதுதான். எத்தனை மீனவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. இந்தத் தீர்மானத்தில் அது வற்புறுத்தப் படுகிறது. எட்டு அல்லது பத்து லட்சம் என்று வைத்துக் கொள்வோம். அரசாங்கம் சொல்கிறபடி, 4-½ லட்சம் மீனவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்தவர்கள் இருக்கிறார்கள். பதினைந்து, இருபது பட்டதாரிகள்தான் இருக்கிறார்கள். இரண்டு மூன்று வக்கீல்கள் தான் இருக்கிறார்கள். டாக்டர், இன்ஜினியர் என்றால் இரண்டொருவர்தான். உண்மையில் மீனவர் சமூகத்தில் இது முன்னேற்றமா என்று கேட்கிறேன். தொழில் வகையில் சிறந்த பணியை நமது அரசாங்கம் செய்து வருகிறது. லட்சக்கணக்கில் மீன்பிடி தொழிலுக்குச் செலவு செய்து விருத்தி செய்துவருகிறது. இதை மறுக்கவில்லை. ஆனால் கல்விதான் மிகவும் முக்கியம். ஒரு சமுதாயம் வளர்வதற்கு கல்வியில் போதுமான அளவு முன்னேற்றமில்லை. இபபோது 'ஸ்காலர்ஷிப்' கொடுக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற சம்பள உதவிப் பணம் இந்தச் சமூகத்திற்குக் கிடைப்பது இல்லை. அதிகப்படியாக 70 சதவிகிதம் மதிப்பெண் வாங்கியிருந்தால்தான் செண்ட்ரல் கவர்ன்மெண்ட். 'ஸ்காலர்ஷிப்' கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இந்தச் சமூகம் கல்வி நிலையில் அடிமட்டத்தில் இருக்கும்போது, எப்படி அதை எட்ட முடியும்? பரம்பரையாகப் படித்து வந்திருந்தால், 70 மட்டுமல்ல, 80 மதிப்பெண்கூட வாங்கிவிடுவார்கள். உண்மையிலேயே மிகக் கூர்மையான அறிவு படைத்தவர்கள் மீனவ சமூகத்தார். காற்றின் போக்கைக் கொண்டு, மேகத்தின் ஓட்டத்தைக் கொண்டு வானிலையை அறிகிறார்கள். தண்ணீர் ஆழத்தை நுணுக்கமாகக் கண்டு விடுகிறார்கள். அந்த நுணுக்க அறிவு அவர்களிடம் 4-20 p.m.

[Vidwan T. Muthukannappan] [31st August 1961

அதிகம். இப்படிக் காற்று அடித்தால் இந்த நீர் ஓட்டம் இப்படிப் போகும், இப்படிப் போனுல் இங்கு மீன் கிடைக்குமென்று அவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து அவர்கள் கூறுவார்கள். கல்விக்கு மட்டும் வாய்ப்புக் கொடுத்தால், மற்ற சமூகத்தைவிட முன்னணிக்கு வரக்கூடிய அறிவு அவர்களுக்கு உண்டு. 'சென்ட்ரல் கவர்ன்மெண்டு ஸ்காலர்ஷிப்' அவர்களுக்குக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டிலே சில பேர்களைக் கல்லூரியில், மெடிகல் காலேஜில் டாக்டர் பயிற்சிக்காக நான் சேர்க்கச் செய்தேன். அவர்கள் 'ஹாஸ்டல்'-லில் தங்கினுல், மாதத்தில் 150 ரூபாய் வேண்டும். ஆனுல் அவர்களுக்குச் 'சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப்' வந்தால் அது சரியாயிருக்கும். ஆனுல் அவர்கள் 70 சதவிகிதம் மதிப்பெண் வாங்கவேண்டுமே. அதனுல் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமல் போகிறது. அவர்கள் தாய் தந்தையர்கள் படித்தவர்களா, அவர்களுக்கு நூல்நிலைய வசதி இருக்கிறதா? அதற்கேற்ற சுற்றுச் சூழ் நிலை இருக்கிறதா? இப்படிப்பட்ட முரடான சூழ்நிலையில் இருந்துகொண்டும் இவ்வளவு மார்க்கு வாங்குகிருர்கள். 'ஸ்டேட் கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப்' மட்டும் சிலருக்குக் கிடைக்கிறது மாதம் ரூ. 50. ஆனுல் அவர்கள் கட்டவேண்டியது மாதம் ரூ. 150. இதைக் கொண்டு அவர்கள் முழுப்படிப்பையும் முடித்துக்கொண்டு படித்து முன்னுக்கு வரவேண்டும். எப்படி முடியும்?

மீன் இலாகா இருக்கிறது. அதில் இந்த 7 அல்லது 8 லட்சம் மீனவர்களில் ஒரு கெஜட் பதிவுள்ள உத்தியோகஸ்தர்கூட இல்லை? காரணம் கல்வியிலே அவர்களுக்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. இப்போது பாருங்கள் சென்னை மாநகரம் இருக்கிறது. கல்வியிலே, நாகரீகத்திலே, அழகிலே சிறந்தது சென்னை. அந்தச் சென்னை ரோடுகளில் கோவணாண்டிகளாகத் திரிகிற மக்களை நீங்கள் பார்ப்பீர்களானுல், அவர்கள் நிச்சயமாக மீனவர்களாகத்தான் இருக்கவேண்டும். பெண்களை எல்லாம் கண்ணேபோல் போற்றுகிருர்கள் பொதுவாக எல்லாச் சமூகத்திலும். ஆனுல், என்னுடைய மீனவ சமூகத்தில் தாழ்வுற்று இழிவான நிலையில் மோசமான அவலக் கோலத்தில் பெண்கள் வாழ்கிருர்கள். வீதிகளிலே பாருங்கள், தலையிலே மீன் கூடையை வைத்துக்கொண்டு நீர் ஒழுக ஒழுகப் பரிதாபமாக ஓடுகிருர்கள். நாகரீகம், கல்வி, அழகு நிறைந்த சென்னையிலே இந்த கோரக் காட்சியைப் இன்றும் பார்க்கலாம். ஏன் இந்த நிலை? நாகரீகம், கல்வி போதவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும். எல்லாச் சமூகமும் சமநிலை பெறவேண்டும். அப்போதுதான் இந்த நாடு முன்னேற முடியும். இல்லையென்ருல், இந்த ஏற்றத் தாழ்வு நிலைத் திருக்குமானுல், முன்னேறும் என்று சொல்ல முடியாது. மேலும் பள்ளிக்கூடத்துப் படிப்பை எடுத்துக்கொண்டால், குழந்தைகளுக்கு எல்லாம் பகல் உணவு போடுகிருர்கள். . . .

MR. CHAIRMAN : The hon. Member's time is up.

VIDWAN T. MUTHUKANNAPPAN : I will finish my speech in five minutes, Sir.

31st August 1961] [Vidwan T. Muthukannappan]

குப்பத்திலிருக்கின்ற மீனவர்கள் வாழும் பகுதியிலிருக்கும் பள்ளிகளில் 4 ந.பை அந்த குப்பத்திலிருக்கின்ற மக்கள் கொடுக்க வேண்டும். 6 ந.பை. அரசாங்கம் கொடுக்கிறது. ஒரு மீனவனின் சராசரி வருமானம் 12 அணு முதல் ஒரு ரூபாய் வரைதான். 6 ந.பை. ஒவ்வொரு குழந்தைக்கும் அந்த ஏழை மீனவர் எப்படிக் கொடுக்க முடியும்? கொடுக்காவிட்டால், பள்ளியில் பகல் உணவு கிடையாது. மீன் துறையிலிருந்து இந்த 4 ந.பை. ஏற்பாடு செய்வாரென்று நினைத்தோம். குழந்தைகளைப் பாருங்கள் மோசமான நிலையில் தலையில்கூட எண்ணெய் இல்லாமல் அரை நிர்வாணமாகப் பெண் குழந்தைகளிருப்பதைப் பார்க்க கண்ராவியாக இருக்கிறது. ஹரிஜனக் குழந்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று ஜதை உடுப்புகள் வழங்குகிறார்கள். அப்படி இந்தக் குழந்தைகட்கும் வழங்கினால்தான், இவர்கள் முன்னுக்கு வரமுடியும். கல்வி வளரும், சமூகமும் வளரும். புத்தகத்தை இனமாக வாங்கிக் கொடுக்கிறார்கள் ஹரிஜனங்களுக்கு. இந்தச் சலுகை மீனவருக்குக் கிடையாது. வருகின்ற வருமானத்தில் அந்தக் குழந்தைகட்கு புத்தகம், உடை வாங்கிக் கொடுக்க ஏழை மீனவனால் முடியாது. உண்மையில் எனக்கு ஒரு விதத்தில் திருப்தி. பிற்போக்காயிருந்த ஹரிஜன சகோதரர்கள் ஒரு சில ஆண்டுகளில் முன்னுக்கு வரப்போகிறார்கள். அதற்குப் பிறகு பின்னேடே ஒரு புதிய ஹரிஜன வர்க்கம் உண்டாகப் போகிறது, அதுதான் மீனவ வர்க்கம். வளர்ந்து வரும் தமிழகத்தில் கீழான நிலையில் கிடந்து உழலும் மீனவ மக்களுக்கு முன்னேற்றமளிக்கும் ஆலோசனை கூற ஒரு கமிட்டி ஆரம்பிக்க வேண்டும். அது முக்கியமான ஊர்களுக்குச் சென்று, அவர்கள் வாழ்க்கை நிலை, பழக்க வழக்கங்கள், கல்வித்தரம் இவற்றை ஆராய்ந்து அரசாங்கத்துக்குத் தக்க சிபாரிசு செய்யலாம். அப்பொழுது நான் சொல்லுவது 100-க்கு 100 உண்மையென்று நீங்கள் திட்டவட்டமாக அறிந்து கொள்வீர்கள். திரு. டி. பி. சீனிவாசவரதன் இருக்கிறார்கள், அவர்கள் உண்மையை அறிந்திருப்பார்களென எண்ணுகிறேன். (ஒரு கனம் அங்கத்தினர்: அவர் அமைதியாக இருக்கிறாரே.) அமைதியாக இருந்தால் ஒத்துக் கொள்கிறார் என்று பொருள். நாங்கள் வேண்டிக் கொள்வதெல்லாம் கமிட்டியை அமையுங்கள், அந்தக் கமிட்டி ஆராயட்டும் என்பதுதான். அம்மையார் அவர்கள் 'இந்தக் கமிட்டிக்கு என்ன வேலை இருக்கிறது? ஏற்கெனவே ஒன்று இல்லையா? ஆலோசனைக் குழுவென்று ஒன்று இருக்கிறதே? என்று கேட்கலாம். நான் சொல்லுகிறேன், இந்தக் கமிட்டியாவது போய் இந்த ஆராய்ச்சி செய்யட்டும். இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயார். இந்தத் தீர்மானத்தின் நோக்கம், அரசாங்கம் இச்சமூகத்தின் குறைபாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்க இந்தக் கமிட்டியையாவது, அல்லது மீன்துறை ஆலோசனைக் குழுவினர் சிலரைக் கொண்டு ஒரு பொறுக்குக் கமிட்டியையாவது அமைக்க உத்திரவிட வேண்டுமென்பதே. இதற்கு அமைச்சர் அம்மையார் இணங்குவார் என எண்ணி இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். 4 30 p.m.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: மீனவர்கள் நிலையை பாதுகாக்கவும், அதற்கு ஆலோசனை கூறவும்

[Srimathi Lourdhammal Simon] [13th August 1961

அரசாங்க அதிகாரிகள் பொதுஜனப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று தீர்மானம் மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி இப்பொழுதுள்ள மீனவர்கள் பிரச்னை, பிற்போக்கான நிலைமை, இவர்களுடைய பரிதாபமான நிலையையும் எடுத்துத்தான் கூறினர் கனம் அங்கத்தினர். இம் மாநிலத்திலும் தமிழ்நாட்டு மீனவர் ஆலோசனைக் குழு ஒன்று இருக்கிறது. இந்தக் குழுவில் எட்டு பேர் அரசாங்க அதிகாரிகள். பன்னிரண்டு பேர் பொதுஜனப் பிரதிநிதிகள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த கனம் அங்கத்தினர் வித்வான் முத்துக்கண்ணப்பனவர்களும் இந்தக் குழுவில் ஒரு அங்கத்தினர். இவர்கள் பல்வேறு துறையிலும், மீன் துறையிலும் அனுபவம் கொண்டவர்கள். இந்தத் தீர்மானம் எந்த நோக்கத்தை வலியுறுத்திக்கொண்டு வரப்பட்டதோ, அதே நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தக் குழு இயங்கி வருகிறது. பொதுவாக ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூடும். வேறு சந்தர்ப்பங்களில் அத்யாவசியமானல் கூடலாம். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பள்ளிக் கூடங்கள் கட்டுதல், அவர்களுக்கு வேண்டிய சமூகப் பொருளாதார வசதிகள் ஏற்படுத்தித் தருதல், மீனவத்துறை எடுத்துச் செய்கிற ஆராய்ச்சியின் பயனை அடிப்படையாகக் கொண்டு மேலும் இந்தத் தொழிலை உயர்த்துதல், மீன் பிடிப்புத் தொழில் வரை அவர்களுக்கு வேண்டிய நிலமளித்தல், மார்கட் வசதியை அபிவிருத்தி செய்தல் இதுபோன்ற விஷயங்கள் இந்தக் குழு ஆராய்ந்து அந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை அரசாங்கத்திற்கு தந்து ஆலோசனை கூறுகிறது. இவைகளை அரசாங்கமும் கவனத்துடனாராய்ந்து, அவைகளை எவ்வளவு தூரம் செயல் முறையில் அமுலாக்க முடியுமோ, அவ்வளவு தூரம் அமுலாக்கியும் வருகிறது. ஆகவே, இப்பொழுது இந்தக் குழு செய்துவரும் இதே வேலையைச் செய்ய இன்னொரு தனிக் குழு தேவையில்லை என்பதைத்தான் நான் இங்கு கூறவேண்டியிருக்கிறது. இன்னும், இன்று அரசாங்கம் பல வித உபகரணங்களையும் உதவியையும் கொடுத்து தொழில் அபிவிருத்திக்கு மீனவர்கள் வாழ்க்கையை உயர்த்தவும் திட்டம் தீட்டியிருப்பது இந்தக் குழுவிற்குத் தெரியும். மேலும் இவ்வித மான நல்ல திட்டங்களிருந்தாலும், உதாரணமாகப் பல பிற்போக்காளர்களுக்கு இதனல் ஒருவித நல்ல பயனுமில்லையென விரோதமாகச் சொல்கிருர்கள். மீனவர்கள் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யப்பட்டவொரு சூழ்ச்சியே இது. மீனவர்கள் கிராமத்தில் கட்சிப் பாகுபாடு இருக்கிறது என்று இங்கு சொல்லப்பட்டது. இன்றைக்குக் குழப்பம் குறைந்து வருகிறது. நாளுக்கு நாள் இவர்கள் பெரும் உதவியையும் பொருளையும் வைத்து இவர்கள் உயரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் எதிர்ப்பும் குறைந்து வருகிறது. இவ்விதமான வொரு முயற்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லாதவொரு வெற்றியாக இருந்தாலும் இதைவிட அதிகமானவொரு வெற்றி ஏற்படுமென்ற நம்பிக்கை இருக்கிறது. இப்பொழுது அந்தத் தொழில் செய்பவர்களுக்குப் புதிய பல வசதிகள் ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக, பிரச்னை

31st August 1961] [Srimathi Lourdhammal Simon]

அழிந்து போகுமென்றவொரு நம்பிக்கை இருக்கிறது Gazetted உத்தியோகஸ்தர்கள் மீனவர்களில் இல்லையென்று சொன்னார்கள். வருந்தத்தக்க விஷயமாக இருந்தாலும், படிப்பில்லாத காரணத்தால் அவர்களுக்கு Gazetted உத்தியோகம் கொடுக்க முடியாமலிருக்கிறது. மேலும், ஒவ்வொரு உத்தியோகமும் படிப்பில்லாமல் கொடுக்க முடியாது. அவ்விதமானவொரு நிலைமை இதுவரை இருந்தாலும் இனிமேல் அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இருக்கின்ற சலுகைகளைப் பயன்படுத்தி இந்தச் சமூகத்திற்கு நல்லதோர் சேவை செய்யவேண்டுமென்று முற்பட்டால், நல்ல பலனேற்படும் என்று கருதுகிறேன். பின்தங்கிய வகுப்பினர் நிலையைக் கூறுவதோடு, அதற்கு உதவி செய்தால் நலமாக இருக்கும். உன்னதமானவொரு சூழ்நிலையை அங்கு கொண்டு வந்தால், அது அநேக நன்மைகளை அளிக்கும். தொழிலிலும் ஒரு அபிவிருத்தி ஏற்படும். இங்கு எல்லோருக்கும் தெரியும் சென்னையிலும் Hotel Oceanic— குக்கு எதிராக மீனவர்களுக்காகக் கட்டப்பட்ட அந்த கட்டிடத்தில்கூட அவர்கள் வராத காரணத்தினால், வேறு தொழில் செய்வோருக்கு அவை விடப்பட்டன. வேண்டுமென்றால், இந்தச் சமூகத்தை முன்னேற்ற எத்தனையோ வழிகளிருக்கின்றன. இங்கு இருக்கின்ற ஒரு குழு செய்து வரும் இந்த வேலைகளை, தனிப்பட்ட இன்னொரு குழு செய்ய வேண்டிய நிலைமை இல்லை. தவறாமல், அங்கத்தினர் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்து நல்ல ஆலோசனைகளைக் கொடுத்தால் இன்னும் அதிகமான விஷயங்களைப் பற்றி ஆராயவும் கவனிக்கவும் நிலைமை ஏற்படுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. T. KOSALRAM : On a point of information, Sir, 4–30 p.m.
இந்த மீனவ சமூகத்தில் 'பறவன்' என்ற வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களை ஷெடியூல் வகுப்பில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் 1959-ம் வருஷம் ஜி.ஓ. இஷ்யூ செய்திருக்கிறார்கள். 1960 வரை அது அமல் நடத்தப்படவில்லை. அதன் பிறகு அதை அமல் நடத்த அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜாதி அடிப்படையில் எந்தெந்த ஜாதியை ஷெடியூல் வகுப்பில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. அதற்குப் பொறுப்பான மந்திரியிடம் கேட்டால் நன்றாக இருக்கும்.

VIDWAN T. M. MUTHUKANNAPPAN : அம்மையார் அவர்களுடைய விளக்கத்திற்கும் என் கருத்துக்கும் வேற்றுமையில்லை. இருந்தாலும் உள்ள நிலையைச் சொல்லி என் கடமையைச் செய்து விட்டேன் என்று திருப்தியடைகிறேன். இதனால் பலன் ஏற்படும் என்று எண்ணுகின்ற காரணத்தால், அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

The Resolution was, by leave, withdrawn.

(4) HOUSE-RENT ALLOWANCE TO TEACHERS.

MR. CHAIRMAN : Sri G. Krishnamoorthy will now move his Resolution. He will please make a short speech.